# காணிக்கை தருகின்றோம்

காணிக்கை தருகின்றோம்
உளமதில் உள்ளதை மகிழ்வோடு
உழைப்பின் விழைவையும்
இணைத்து உந்தன்
பலியினில் நிறைத்திட அளிக்கின்றோம்-(2)
இதையேற்பாய் நல் இயேசுவே
எதையும் அன்புடன் ஏற்பவரே -( 2)

**1)**
கோதுமை மணிகள் மடியும் மண்ணில் நிறைந்த பலன் தரவே
மடிவோம் நாமும் தினமும் வாழ்வில் உண்மை நிலை பெறவே - (2)
துன்பம் நிறைந்த வாழ்வை முழுதும் உந்தன் பாதம் அளிக்கின்றோம் - (2)
கனிந்த மனதுடன் ஏற்று எமக்குஇனிமை வாழ்வில் பொழிவீரே

(காணிக்கை)

**2)**
மலரும் மணமும் பிரிந்து இருந்தால் மலரில் அழகில்லையே
மனிதன் மனதில் அமைதி இழந்தால் வாழ்வில் சுவையில்லையே - ( 2 )
இன்று உலகில் மாந்தர் தேடும் அமைதி எங்கும் கிடைத்திட -( 2 )
புதிய வாழ்வை அளிக்கும் தேவா பலியாய் எமையே ஏற்பீரே
இதையேற்பாய் நல் இயேசுவே எதையும் அன்புடன் ஏற்பவரே – ( 2 )

(காணிக்கை)